செய்திவெளியீடு **நாள் : 29.12.2025**

வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக பாராமுகமாக இருந்த வடசென்னை, திமுக ஆட்சி ஏற்பட்ட பிறகு வாடா சென்னையாக மாறி இருக்கிறது

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

****

கொளத்தூர் மற்றும் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிகளில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.12.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளான கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா பணிகளையும், குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் பணிகளையும், புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் முதல்வர் படைப்பகம் என ஒருங்கிணைந்த"மக்கள் சேவை மையம்" கட்டுமானப் பணிகளையும், புதிய நவீன சந்தை கட்டுமானப் பணிகளையும், புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம் மற்றும் பெரவள்ளூர் காவல் நிலையம் கட்டுமானப் பணிகளையும், இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்தும், அதனைத் தொடர்ந்து திரு.வி.க. நகர் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில், மேம்படுத்தப்பட்டு வரும் பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா கட்டுமானப் பணிகளையும், சந்திரயோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையம் கட்டுமானப் பணிகளையும், சுப்புராயன் தெருவில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார்

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக பாராமுகமாக இருந்த வடசென்னை, திமுக ஆட்சி ஏற்பட்ட பிறகு வாடா சென்னையாக மாறி இருக்கிறது, வடசென்னை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த வடசென்னை வளர்ச்சி திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டது. வடசென்னை மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டு வருகிறது. வரும் 2026 ஜனவரி 10 ஆம் தேதி கொளத்தூர் எரிக்கரை மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

Verified by RealState

மேலும், சென்னையில் சென்னை மாநகராட்சி சார்பில் 15 முதல்வர் படைப்பகம் உருவாக்கப்பட்டு வருகிறது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 30 முதல்வர் படைப்பகங்கள் சென்னை மாநகர் முழுவதும் உருவாக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** மூன்று "**முதல்வர் படைப்பகம்**" மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உதவி பதிவுத்துறை தலைவர் (சென்னை வடக்கு) திருமதி.ரூபியா பேகம், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.இந்துமதி, டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐசிஎப் முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி, மாநகராட்சி அலுவலர்கள், மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™